**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை : திரு. **எஸ்.என். தனஞ்ஜெயன், B.B.A., B.L.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.
2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04-ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைக்கால நிறைவேற்று மனு எண் 3/2024 நிறைவேற்று மனு எண். 8/2019 ன் அசல் எண்.340/1998**

1.சந்திரா அம்மாள்
2. சுமதி
3. லலிதா
4. பார்வதி ... மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

/எதிர்/

1. கன்னியப்பன்
2.புஷ்பா ....எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

இம்மனு 15.03.2024 தேதியன்று என்முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.எஸ். சங்கரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் பி. பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல்

S N DHANANJEYAN
Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.03.04 19:25:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

செய்யப்படாமல்  பின்னிட்டு மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரா ் வாதம் கேட்டுக்கப்பட்டு, மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>உத்தரவு</u>**

அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களை அனுசரித்து மனுதாரர்கள் தரப்பில் நிறைவேற்று மனுவில் கூடுதல் எதிர்உரை தாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு அனுமதி வழங்கி உத்திவிட வேண்டுமாறு மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>5ம் மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட</u> <u>மனுவின் சுருக்கம்</u> :-**

i) இம்மனுவில் 5ம் மனுதாரர் என்றும், முதல் மனுதாரர் தன்னுடைய தாயார் ஆவர் என்றும் மூன்று முதல் ஐந்து மனுதாரர்கள் தன்னுடைய உடன்பிறந்த சகோதரிகள் ஆவார் என்றும், எதிர்மனுதாரர்கள் இந்த நிறைவேற்றும் மனுவை அவர்களின் தீர்ப்பின் அடிப்படையில் மனு சொத்து குறித்து கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்றும்அவ்வாறு எதிர்மனுதாரர் பதிவு செய்து கொடுக்க மறுக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார்.

ii) இந்த நிறைவேற்று மனுவில் மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே எதிர் உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த எதிர் உரையில் சார்பு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும தீர்ப்பு ஆணையம் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த நிலையில் எதிர் மனுதாரரின் நிறைவேற்று மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் தாக்கல் செய்தோம் என்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இரண்டாவது மேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், அதனால் இந்த நிறைவேற்றும் மனுவில் மனுதாரர்கள்

S N DHANANJEYAN
Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.03.04 19:25:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு.

தரப்பில் கூடுதல் எதிர்உரை தாக்கல் செய்ய வேண்டி உள்ளது என்றும், ஏனென்னறால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு இருப்பதால் ஏற்கனவே தாக்கல் செய்த எதிர் உரையில் அனைத்து விவரங்களையும் தெரியப்படுத்தவில்லை என்றும் சென்னை உயர்நீதிமன்றத்திலும் இரணடாவது எதிர் மேல்முறையீட்டில் அனைத்து விவரங்களும் கூறி கனம் செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் சார்வு நீதிமன்றத்திலும் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீருப்பானையம் நீக்கறவு செய்யப்பட்டவேண்டும் என்றும் கோரிருந்தும் ஆனால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் அனுமதியே போடாது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதால் இந்த நிறைவேற்றும் மனுவில் மனுதாரர்கள் தரப்பில் இந்த நிறைவேற்றும் மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் எந்த அடிப்படையில் அது நிலைக்கத்தக்கது அல்ல என்பதையும் கனம் கோர்ட்டில் தெளிவுபடுத்த வேண்டி உள்ளது என்றும் அதனால் தான் எங்கள் தரப்பில் கூடுதல் எதில்உரை தாக்கல் செய்யஅனுமதி கோரி இந்த மனுவை தாக்கல் செய்கின்றோம் என்றும் இந்த மனு அனுமதிக்கப்படவில்லை என்றால் மனுதாரர்கள் பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவோம் என்றும் தங்களுடைய உரிமை பாதிக்கப்படும் என்றும் ஆகவே மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்உரை தாக்கல் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டுமாறு மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 3. <u>1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் எதிருரையின் சுருக்கம்</u>

i) மனுதாரர் தற்போது கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல.

ii) மனுதாரர் தனது அபிடவிட்டில் அவர்கள் தரப்பில் ஏற்கனவே எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் கனம் செய்யாறு சார்பு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்புரையின் மீத மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு

S N DHANANJEYAN

Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.03.04 19:25:27 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு.

தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த நிலையில் எதிர்மனுதாரரின் நிறைவேற்று மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் தாக்கல் செய்ததாக கூறியுள்ளார் என்றும் இரண்டாவது மேல் முறையீடு தற்போது தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் கூடுதல் எதிருரை தாக்கல் செய்யவேண்டி உள்ளது என்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் இருந்ததால் ஏற்கனவே தாக்கல் செய்த எதிருரையில் அனைத்து விவரங்களையும் தெரியப்படுத்தவில்லை என்பதும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி இரண்டாவது மேல் முறையீடு அனுமதிக்கப்படாத நிலையில் கூடுதல் எதிருரை தாக்கல் செய்து நிறைவேற்று மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பது முற்றிலம் தவறு, சட்டப்படிக்கும் ஏற்க முடியாதது வாதத்திற்கும் பொருண்மைக்கும் பொருந்தாத ஒன்று.

iii) மனுதாரர் தற்போது கூடுதல் எதிருரையில் கூறியுள்ள வாதம் ஏற்கனவே முதலில் எதிருரை தாக்கல் செய்த போதே கிடைக்க கூடியதாகும் என்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு தான் 2 முதல் 5 மனுதாரர்களுக்கு எதிராக நிறைவேற்று மனு தாக்கல் செய்திருப்பது குறித்து தெரியவந்தது போல அபிடவிட்டில் கூறியிருப்பது விந்தையானது வேடிக்கையானது என்றும் வாதத்திற்கு கூட ஏற்க முடியாதது.

iv) மனுதாரரால் தற்போது கூடுதலாக எடுத்துரைக்கப்படும் சங்கதியை முதல் எதிருரை தாக்கல் செய்தபோதே தெரிந்திருந்தும் கூறாமல் இருந்து விட்டு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது மேல் முறையீடு அனுமதிக்கப்படவில்லை என தெரிந்த பிறகு மூன்று ஆண்டுகள் கழித்து கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய கோரியிருப்பது சட்டப்படி ஏற்க கூடியது அல்ல.

S N DHANANJEYAN

Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.03.04 19:25:34 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு.

v) நிறைவேற்று மனுவின் நடவடிக்கைளை தாமதப்படுத்துவதற்காக வேண்டியே மனுதாரா் தற்போது மனு தாக்கல் செய்துள்ளாா் நிறைவேற்று மனுவில் உள்ள 1ம் எதிா்மனுதாரரே மனுதாரா் எடுத்துரைக்கும் சங்கதியை அதாவது 2 முதல் 5 எதிா்மனுதாரா்கள் பாா்டிகள் அல்ல 2 முதல் 5 எதிா்மனுதாரா்களுக்கு எதிராக பரிகாரம் கோரப்படவில்லை என்றும் அதனால் 2 முதல் 5 எதிா்மனுதாரா்களுக்கு எதிராக நிறைவேற்று மனு தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லை என முதலில் தாக்கல் செய்த எதிருரையில் கூறிவில்லை என்றும் ஏனெனில் 2 முதல் 5 மனுதாரா்கள் சாா்பாக 1ம் மனுதாரரே குடும்பத்தையும் மனு சொத்தினையும் நிா்வாகம் செய்து வருகிறாா் என்றும் அதனால் மனுதாரரே மற்ற மனுதாரா்களுக்காவும் சோ்த்து இரண்டு வழக்குகளையும் மாண்புமிகு சாா்பு நிதிமன்றத்திலும் மாண்புமிகு சென்னை உயா்நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளாா். மனுதாரரே அவரது கூடுதல் பதிலுரையில் இந்த சங்கதிகளை ஒப்புக்கொண்டுள்ளாா்.

vi) Counter claim மனுவில் யாா் யாருக்கு எதிராக பரிகாரம் கோருகிறாா் என்பதையும் தெளவுபடுத்தவேண்டும் என்பதும் 2 முதல் 5 மனுதாரா்களை தரப்பினா்களாக சோ்த்து அவா்களுக்களதிராக தீா்ப்பாணை பெறாத பட்சத்தில் அவா்களும் மனு சொத்துக்கள் குறித்து கிரயப்பத்திரம் எப்படி பதிவு செயது கொடுக்கவேண்டும் என்று கோரி தாக்கல் செய்திருக்கும் நிறைவேற்று மனு செல்லத்தக்கதல்ல என மனுதாரா்கள் கூற அருகதையுடையா் அல்ல, முகாந்திரமும் இல்லை. ஏனெனில் விசாரணை நீதிமன்றம் 1ம் மனுதாரரின் வழக்குரை சாட்சியம் வாதுரைகளின் அடிப்படையிலேயே வாதியும் அவரது பெண்மக்களும் ( 2 முதல் 5 மனுதாரா்களை சோ்த்து) பிரதிவாதிக்கு கிரயபத்திரம் எழுதி பதிவு செய்து தரவேண்டும் என தீா்ப்புரை பகரப்பட்டுள்ளது. வாதத்திற்கேனும் மேற்டிப தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் செல்லத்தக்கது அல்ல என கூறும் மனுதாரா்கள், Counter claim மனுவில் அளித்த உத்தரவின் பேரில் மேல் முறையீடு செய்திருக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல 1ம மனுதாரா வாளா

S N DHANANJEYAN
Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.03.04 19:25:54 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு.

இருந்துவிட்டு தற்போது 1ம் எதிர்மனுதாரர் தீரப்பின் பலனை அடையாமல் இருக்கும் பொருட்டு நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை வேண்டுமென்றே தாமதப்படுத்தும் நோக்கத்துடன் இந்த மனுவினை 1ம் மனுதாரர் தனது மகளை வைத்து தாக்கல் செய்துள்ளார்.

vii) மனுதாரர்க்ள மனுவில் உண்மைத்தன்மை இல்லை மனுதாரர்கள் நீதிமன்றத்தை சுத்தமான கைகளுடன் அணுகவில்லை எந்தவகையிலாவது 1ம எதிர்மனுதாரர் தாக்கல் செய்துளள நிறைவேற்று மனு நடவடிக்கைகளை தாமதப்படுத்தவேண்டும் என்றோ அல்லது ளிரவேநச எடயைஅ மனுவில் பிறப்பித்த உத்தரவின் பலனை அனுபவிக்க வேிடாமல் தடுக்கும் பொருட்டு மனுதாரர்கள் மனுவையும் எதிருரையினையும் தாக்கல் செய்துள்ளனர்.

viii) மனுதாரரின் மனுவினை கனம் கோர்ட்டார் அவர்கள் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமாறு கோரி 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வெதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் மனுவினை பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரனை செய்யப்படவில்லை, சான்றாவணங்கள் எவையும் குறியீடு செய்யப்படவில்லை.

6. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**<u>தீர்வு</u> :-**

7. மனுதாரர்கள் தாங்கள் ஏற்கனவே எதிருரை தாக்கல் செய்த சமயத்தில் அசல் வழக்கு தீர்ப்பாணைக்கு எதிராக 2ம் மேல்முறையீடு நிலுவையில் இருந்த காரணத்தினால், சங்கதிகளை பொறுத்து எதிருரை தாக்கல் செய்யாமல் மேற்படி காரணத்தை குறிப்பிட்டு மட்டும் எதிருரை தாக்கல் செய்துவிட்டு, தற்போது சங்கதிகளின் அடிப்படையில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிருரையை ஏற்றுக்கொள்ள கோருகிறார்கள்.

S N DHANANJEYAN

Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.03.04 19:26:04 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு.

8, கற்றறிந்த 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் 10.06.2019லேயே மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்துவிட்ட நிலையில், தற்போது உரிமையாக கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய கோரமுடியாது என்றும், நீதிமன்றத்தின் விருப்புடை அதிகாரம் நியாயமான முறையில் பயன்படுத்தப்படவேண்டும் என்றும், ஏற்கனவே தாக்கல் செய்த எதிருரைக்கு பின்னிட்ட சங்கதிகள் எதுவும் கூடுதல் எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும், தற்போது குறிப்பிட்டுள்ள ஆட்சேபனைகள் அனைத்தும் ஏற்கனவே மனுதாரர்களுக்கு தெரிந்தே இருந்தது என்றும், எ.ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை 1ம் மனுதாரர் தனியாக ஏற்படுத்தி கொடுத்த விவரத்தை மறைத்து சுத்தக்கரங்கள் இன்றி நீதிமன்றத்தை அணுகியிருப்பதாகவும் வாதிட்டு மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று கோரினாலும், 1ம் எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில், மனுதாரர்கள் நிறைவேற்றுதல் மனுவில் தாக்கல் செய்ய உள்ள கூடுதல் எதிருரையில் உள்ள சங்கதிகளை மேற்கோள் காட்டியும், கூடுதல் எதிருரை சங்கதிகளை கடுமமையாக ஆட்சேபித்தும் உள்ளார். இறுதிநிலை தீர்ப்பாணை மனு தற்போதும் விசாரணை நிலையிலேயே இருப்பதை கருத்தில்கொண்டும், பன்மடங்கு நடவடிக்கைகளை தவிர்க்கவேண்டியும், கட்சிகளுக்கு சங்கதிகளின்படி வழக்காட வாய்ப்பளிக்கவேண்டும் என்றும், நீதியின்பால் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. ஆனாலும், 1ம் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயம் மற்றும் கஷ்ட, நஷ்டம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ. 2000/-ம் செலவுத்தொகையாக செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு 12.04.2024க்குள் ரூ. 2000/-ஐ செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை செலுத்த தவறினால் இம்மனு நிராகரிக்கப்படவேண்டியது.

நிபந்தனை நிறைவேற்றுதலுக்காக அழைக்க 12.04.2024.

S N DHANANJEYAN

Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.03.04 19:26:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

S N DHANANJEYAN Digitally signed by S N DHANANJEYAN Date: 2024.03.04 19:26:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்** - இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** - இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்**

எ.ம.சா.ஆ.1 - 21.11.2007ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல்.

S N DHANANJEYAN Digitally signed by S N DHANANJEYAN Date: 2024.03.04 19:26:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு.